ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
## SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

EDB

**அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு**

# பதவி வெற்றிடங்கள்

இலங்கையின் ஏற்றுமதிகளுக்காக அபிவிருத்தி மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகவுள்ள சிகரமான அரசாங்க நிறுவனமே இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையாகும் (EDB).

தேசிய ஏற்றுமதி உபாய முறையின் செயற்பாட்டுக்களுக்கான திட்டங்கள் அடங்கலாக ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஊக்குவித்தல் செயற்பாடுகளை அமுல்நடாத்துவதில் பங்களிப்பை வழங்கக்கூடிய தொழில்சார் திறன்கள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட ஆற்றலையுடைய பின்வரும் பதவிகளுக்காக ஏஅச உடன் இணைய விரும்பும் இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. உதவிப் பணிப்பாளர் (எம்எம் 1-1)

**பணி விளக்கம்**

சந்தை அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்தல், அமுல்நடாத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், வழங்கல் அபிவிருத்தி வாய்ப்புக்களை அடையளாம் காணல், சிறிய மற்றும் நடுத்தர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல், அமுல்நடாத்தல் மற்றும் கண்காணித்தல், ஏற்றுமதியாளர்களை தாக்கும் பேரண்ட பொருளாதார பிணக்குகள் தொடர்பான ஆய்வுகளை கையேற்று அவ்வாறான பிணக்குகளை தீர்ப்பதற்கான கொள்கை செயற்பாடுகளை பரிந்துரைத்தல், உற்பத்தி அபிவிருத்தி, தர மேம்படுத்தல் மற்றும் பொதியிடல் அபிவிருத்தி இன்னும் பலவற்றிற்காக அறிவுரைச் சேவைகளை வழங்கல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ சர்வதேச தொடர்புகள்/ பொருளாதாரம்/ வர்த்தகம்/ விஞ்ஞானம்/ கமத்தொழில்/ வியாபார நிர்வாகம் அல்லது தொடர்புடைய துறையில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று அத்துடன் அரசாங்க திணைக்களமொன்றில்/கூட்டுத்தாபனம்/சபை அல்லது புகழ்வாய்ந்த தனியார் துறை நிறுவனமொன்றில் பட்டப்பின் தகைமைப் பட்டத்துடனான ஒரு வருட அனுபவம்.

1ஆம் அல்லது 2ஆம் வகுப்பு பட்டதாரிப் பட்டத்துடனான அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 2. உதவிப் பணிப்பாளர் - நிதி (எம்எம் 1-1)

**பணி விளக்கம்**

கணக்குப் பதிவியல் பிரிவை மேற்பார்வையிடல், சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொடர்பான வேலையை மேற்பார்வையிடல், வரவுசெலவுத்திட்டம், தேவைப்படும் காசுப்பாய்ச்சல் மற்றும் ஏனைய கூற்றுக்கள்/தகவல் ஆகியவற்றை தயாரித்தல். வழங்கப்பட்டுள்ள அதிகாரவரம்பிற்கு உரித்தான வகையில் வவுச்சர்களை அத்தாட்சிப்படுத்தல், நிதிப் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்தி நிதிய முகாமைத்துவம் தொடர்பான கடமைகளை மேற்கொள்ளல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அல்லது தொடர்புடைய துறையில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று அல்லது இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைநிலை மட்ட தகைமை.

**அல்லது**

பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைநிலை மட்ட தகைமை.

**அல்லது**

பட்டயம் பெற்ற சான்றிதழ் வழங்கப்பட்ட கணக்காளர்கள் சங்க இடைநிலை மட்ட தகைமை.

**அல்லது**

மேலேயுள்ள தகைமைகளை பெற்ற பின்னர் அரசாங்க திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ் வாய்ந்த தனியார் துறை நிறுவகமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட பட்டப்பின் பெற்ற பட்ட தகைமை அனுபவம்.

குறிப்பு: கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கிடல் அறிவு சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

**சம்பள அளவுத்திட்டம் (எம்எம் 1-1)**

ரூ.53,175/- - 10 x 1,375 – 15 x 1,910 - ரூ. 95,575/-. 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் IIஆம் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பணிப்புரைகளுக்களின் பிரகாரம் சம்பளங்கள் வழங்கப்படும்.

## 3. ஏற்றுமதி ஊக்குவித்தல் அலுவலர் (ஜேஎம் 1-1)

**பணி விளக்கம்**

சிரேஷ்ட அலுவலரின் மேற்பார்வையின் கீழ் பிரிவு/அலகின் இயக்க செயற்பாடுகளை திட்டமிட்டு நிறைவேற்றல், உரித்தான உற்பத்தி துறை தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், உரித்தான துறைக்கான தரவு/தகவலை இற்றைவரையாக்கல், பண்டங்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொடர்பான வேறேதாவது கடமைகளை நிறைவேற்றல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ சர்வதேச தொடர்புகள்/ பொருளாதாரம்/ வர்த்தகம்/ விஞ்ஞானம்/ கமத்தொழில்/ வியாபார நிர்வாகம் அல்லது தொடர்புடைய துறையில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று அத்துடன் அரசாங்க திணைக்களமொன்றில்/கூட்டுத்தாபனம்/சபை அல்லது புகழ்வாய்ந்த தனியார் துறை நிறுவனமொன்றில் பட்டப்பின் தகைமைப் பட்டத்துடனான ஒரு வருட அனுபவம்.

1ஆம் அல்லது 2ஆம் வகுப்பு பட்டதாரிப் பட்டத்துடனான அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 4. கணனி நிகழ்ச்சித் திட்டவியலாளர் (ஜேஎம் 1-1)

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அனைத்து பிரிவுகள்/அலகுகளின் இயக்க செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணனி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை பராமரித்தல் மற்றும் தேவைப்படும்போது புத்தாக்கம் செய்தல்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானமாணி பட்டதாரிப் பட்டம் அல்லது பிரித்தானிய கணனி சங்க அங்கத்துவம் அல்லது கூட்டுரு அல்லது முகாமைத்துவ தகவல் முறைகள் UK இன் முழுமையான அங்கத்துவம்.

**சம்பள அளவுத்திட்டம் (ஜேஎம் 1-1)**

ரூ.42,600/- - 10 x 755 – 18 x 1,135 - ரூ.70,580/-. 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் II ஆம் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் சம்பளங்கள் வழங்கப்படும்.

**வயது:** 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். இருப்பினும், உச்ச எல்லை வயதானது அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் அபேட்சகர்கள் மற்றும் உள்ளக அபேட்சகர்களுக்கு ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் முறைமை (எம்எம் 1-1 மற்றும் ஜேஎம் 1-1)**

எழுத்துருவிலான போட்டிரீதியிலான பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்று ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

**ஏனைய நன்மைகள்:**

- மருத்துவ உதவித் திட்டம்.
- இலகுதவணை வட்டி வீதத்தில் வீடமைப்புக் கடன் திட்டம் மற்றும் அனர்த்த கடன்கள்.
- பாவிக்கப்படாத மருத்துவ விடுமுறைக்கான பணம் மற்றும் வருடாந்த மிகையூதியம்.
- தெரிவு செய்யப்பட்ட பஸ் வழிப்பாதைகளுக்கான போக்குவரத்து வசதி.
- ஊசேநி - ஊழியர் - 10% ; சபை - 15% மற்றும் ஊநநி - சபை 3%.

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**

விண்ணப்பங்கள் மனித வளங்கள் ஏஅச, 5 ஆம் மட்டம், மனித வளங்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விதிக்கப்பட்ட படிவத்திலேயே அல்லது **www.srilankabusiness.com** என்ற இணையதளத்தின் under the Section “Announcements” என்ற இணையத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களிலேயே தயாரிக்கப்படல் வேண்டும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அனைத்து உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடன் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக பதிவுத் தபாலில் 2018.06.28ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர், ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். பதவியின் தலைப்பு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

அரச துறையைச் சேர்ந்த ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவன தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டும். மூடும் திகதிக்கு முன்னராகவே EDB ஐ அடையும் வகையில் விண்ணப்பத்தின் முன்பிரதியொன்று அனுப்பப்படல் வேண்டுமென விண்ணப்பதாரிகள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.


**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர்**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை,**
**NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-2300700. தொலைநகல்: 011-2300715**
**இணையம்: www.srilankabusiness.com**